உ
சிவமயம்

திருவண்ணாமலை ஆதீனத் தம்பிரான், யாழ்ப்பாணம், திருநெல்வேலி
சாலிவாடி **ஸ்ரீ-ல-ஸ்ரீ ஜ்ஞானப்ரகாச ஸ்வாமிகள்**
இயற்றிய

சிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்

திருமண விழா மலர்

மணமக்கள்

சிவாகம பாஸ்கர சிர. N. உமாபதி சிவம்
சௌ. S. சிவரஞ்ஜனி (எ) லலித விஸ்வேஸ்வரி B.Sc.,

நாள் : 15.02.2013



மணமக்கள்

சிவாகம பாஸ்கர சிர. N. உமாபதி சிவம்
சௌ. S. சிவரஞ்ஜனி (எ) லலித விஸ்வேஸ்வரி B.Sc,

உ

ஶிவமயம்

திருவண்ணாமலை ஆதீனத் தம்பிரான்,
யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஶாலிவாடி

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஜ்ஞானப்ரகாஶ ஸ்வாமிகள்

இயற்றிய

ஶிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்

தொகுப்பு
ஶிவஸ்ரீ ஜி. கார்த்திகேய ஶிவம்
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்
திருப்பரங்குன்றம்

திருமண விழா மலர்

மணமக்கள்

ஶிவாகம பாஸ்கர சிர. N.உமாபதி ஶிவம்

ஸௌ. S.ஶிவரஞ்ஜனி (எ) லலித விஶ்வேஶ்வரீ
B.Sc

நாள்

15.02.2013



திருநெல்வேலி
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்

நூல்விளக்கக் குறிப்பு

நூல்பெயர்	ஶிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்
ஆசிரியர்	ஶாலிவாடி ஸ்ரீ ஜ்ஞான ப்ரகாஶர்
பொருள்	ஶிவாகமம்
தொகுப்பு	ஶிவஸ்ரீ ஜி. கார்த்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம்
பதிப்பு	இரண்டாம் பதிப்பு
ஆண்டு	2013
மொழி	ஸம்ஸ்க்ருதம்
எழுத்து	க்ரந்தம்- தமிழ்
பக்கங்கள்	140
எழுத்து அளவு	12 புள்ளிகள்
அளவு	1/8
தட்டச்சு	ஸ்ரீ அரவிந்த ஶிவம் ஸ்ரீ மணிகண்ட ஶிவம்
அச்சகம்	ஆர். ஆர் ப்ரிண்டர்ஸ், மதுரை
வெளியீடு	ஶிவஸ்ரீ என்.கே நடராஜ ஶிவாசார்யர், சென்னிமலை

உ

ஶிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

பதிப்புரை

எல்லாம்வல்ல ஶிரகிரி வேலவன் சென்னிஆண்டவரின் திருவருளால் நடைபெறும் எமது குமாரன் சிர. உமாபதி சிவம் ஸௌ. ஶிவரஞ்ஜனீ ஆகியோரது திருமண விழா 15.02.13 நடைபெறுகின்ற நன்னாளில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்ரகாசாசார்யர் இயற்றிய 'ஶைவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்' என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

நூல் வெளியீட்டுப் பணியில் பேருதவிபுரிந்த திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயத்தின் ஶிவாகம அத்யாபகர் ஶிவஸ்ரீ கார்த்திகேய ஶிவம் மற்றும் மாணவர்களுக்கும், ஆசியுரை நல்கிய பெரியோர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த மதுரை ஆர்.ஆர் ப்ரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

அனைவருக்கும் ஶிரகிரி வேலவனின் திருவருள் உண்டாக வேண்டுகிறோம்.

பேரன்புடன்

ஶிவஸ்ரீ என்.கே நடராஜ ஶிவாசார்யார்

ப்ரதான அர்ச்சகர்

அருள்மிகு சென்னிஆண்டவர் திருக்கோயில்

சென்னிமலை

உ
ஸ்ரீ குருப்யோ நம:
கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்
ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி – ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆசியுரை

எல்லாம் வல்ல ஶிரகிரி வேலவன் சென்னி ஆண்டவரின் திருவருளால் நடைபெறும் நமது மாணவன் சிர. உமாபதி ஶிவம் ஸௌ. ஶிவரஞ்ஜனீ ஆகியோரது திருமண விழா 15.02.13 நடைபெறுகின்ற நன்னாளில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி என வழங்கும் ஶாலிவாடிபுரத்தைச் சார்ந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்ரகாஶாசார்யர் இயற்றிய 'ஶைவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்' நூல் வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

ஶைவஸமயக் கருவூலங்களாகிய ஶிவாகம ஸாரமாக விளங்குகின்ற இது போன்ற எண்ணற்ற நூல்கள் இன்றும் வெளிவராமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வெளிக்கொணர்ந்து அவற்றில் உள்ள கருத்துக்களையெல்லாம் நம்மக்களுக்கு எடுத்துச் செல்லவேண்டிய பெரிய பொறுப்பு நமது கைகளில்தான் உள்ளது என்பதை நாம் அனைவரும் உணரக் கடமைபட்டவர்கள்.

அதற்கு இதுபோன்ற நிகழ்ச்சிகளில் நூல் வெளியீடு செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

திருமண விழா இனிது நடைபெறவும், நூல் வெளியீடு சிறக்கவும், மதுரையம்பதியில் கோயில் கொண்டு அருளும் மீனாக்ஷி அம்பிகை உடனமர் சொக்கநாதப் பெருமானின் திருவருளையும், குன்றத்தில் கோயில் கொண்டு விளங்கும் குமரன் தெய்வானை நாயகன் முருகப்பெருமானின் பேரருளையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

ஶிவஶ்ரீ K.ராஜாபட்டர்

திருப்பரங்குன்றம்

உ
Thiruchitrambalam
"Thirukkayilaya Paramparai" Kongu Mandala Guru
Sri Manickavasagar Thirumadalaya 57th Maha Sannithanam
Sri.La.Sri Raja. Saravanamanickavasaga Swamigal
Koonampatti Kalyanapuri Adheenam
Pallagoundanpalayam (Po), Vijayamangalam - 638 056.
Ph : 04294 242056

உ
ஸ்ரீ குருப்யோ நம:

ஆசியுரை

நமது நல்லாசிக்கும் நன்மதிப்பிற்குமுரிய 'ஶிவாகமச் செம்மல்' ஶிவஸ்ரீ N.K. நடராஜ ஶிவாசார்ய ஸ்வாமிகட்கு ஸந்நிதானத்திலிருந்து எழுதிய ஆசீர்வாதம். நலம். உங்கள் புதல்வன் திருமண வைபவத்தில் அருமையானதொரு ஞானநூல் வெளியிடுவது கண்டு மிக மகிழ்ந்தோம். கருணையே வடிவமான இறைவன். ஆறாவது பிறவியாகிய மானுடப் பிறவி.

பிறவிப்பயனெய்துவதற்கு அடியார்களைத் தோற்று வித்து அவர்கள் வாயிலாக அருளிச்செய்ததைப் போதாது என தானே அருளியது ஶிவாகமம். அவ்வழியே எங்கும் காணக்கிடைக்காத இறைவன், அவ்வரிய மந்த்ரத் தன்மைக்கு மகிழ்ந்து கற்சிலைகளில் எழுந்தருளி அருள் செய்யக்கூடிய பெருந்தன்மை உடையது ஒன்றே ஒன்று அவ்வாகம மந்த்ரங்களுக்கே.

அதைத்தான் மணிவாசகர் ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் என அழுத்திக் குறிப்பிட்டார். ஆக வ்யாபித்து இருக்கும் இறைவனை ஒன்றுகூட்டி நிலை நிறுத்தி வழிபடச் செய்வது ஆகமம். அருளுகின்ற பெருமானைப் போற்றுவதே தோத்திரங்களான தமிழ் மறைகளெனக் கூறும் அடியார்கள் திருவாக்குகள்.

இதனை நன்குணர்ந்த திரு. N .K. நடராஜ ஶிவாசார்ய ஸ்வாமிகள், தனது தவப்புதல்வன் ஶிவஸ்ரீ ந. உமாபதி ஶிவம், செல்வி. ஶிவரஞ்ஜனீ ஆகியோர் திருமண விழாவில் இவ்வரிய நூலான ‘ஶைவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்’ எனும் நூலினை வெளியிடுவது மிகமிகப் பாராட்டுக்குரியதாகும்.

விழா இனிது நடைபெறவும், விழாத் தம்பதியர் நீடுஇனிது வாழவும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

நிறைந்த ஆசிகள்

உ

ஶ்ரீ குருப்யோ நம꞉

ஶிவாகம ஶிரோமணி
ஶிவஶ்ரீ ந. ஶரவண ஶிவாசார்யார்
கதித்தமலை திருக்கோயில்
ஊத்துக்குளி, திருப்பூர் மாவட்டம்.

அணிந்துரை

ய꞉ காமிகாதி விநிவேதித தத்த்வராஶி꞉
தத்த்வ போதாய பஶு பாஶ விமோசகாய꞉ ।
நாராயணீ ஹ்ருஜ்ஜலஜார்ச்சித கணேஶ꞉
ஹஸ்தீ ஸ மே திஶது நைஜ பதாரவிந்தே ॥

எல்லாம் வல்ல பரம்பொருள் ஜீவன்களுக்கு தனு, கரண, புவன போகங்களை அளித்து பாஶபத்தர்களாகிய அஜ்ஜீவன்களின் மலபரிபாகத் தன்மையினால் (ஸமயதீக்ஷாதிகளினால்) தன் வயப்படுத்தி ஸாலோக, ஸாரூப்ய, ஸாமீப்ய ஸாயுஜ்ய நிலைகளை அடைய சர்யா, க்ரியா, யோக, ஞான பாதங்களாக காமிகாதி இருபத்திஎட்டு ஆகமங்களையும் தந்து அருளினார்.

மூலாகமங்கள், உபாகமங்களின் தொகுப்பான பதினெண் பத்ததிகளும் ஒரே பரம்பொருள் என்பதையே

'அவனே தானே யாகி அந்நெறி ஏகனாகி
இறைபணி நிற்க மலமாயை தன்னொடு
வல்வினை இன்றே' என தெளிவுபடுத்துகிறது.

ஶிவைக்யம் மதஸ்ஸித: தஸ்மிந ஸ்வரத்ரிக:
ஶ்ருத்யாத்³யஸம் ஸ்வஸ்தோ² ப⁴வதி ஸ்வாநுபூ⁴திமாந்

என்றவாறு ஸ்வானுபூதிமானாய் திகழ்ந்து அனைவரது இதயத்திலும் வீற்றிருக்கும் பரமகுருவாகிய எங்கள் குருநாதர் அல்லூர் ஶிவாசார்ய ஸ்வாமிகளின் ப்ரதான சீடர் ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலய முதல்வர் ஶிவாகம ஶிரோமணி ஶிவஸ்ரீ ராஜா பட்டர் அவர்களின் ஆசிக்குரிய அன்பிற்குரிய சீடர், கொல்லங்கோடு மந்த்ர-தந்த்ர-ஆகமச் செம்மல் ஸ்வர்கஸ்ரீ விஶ்வநாத ஶிவாசார்யரின் தௌஹித்ரன் எனது அன்பிற்கும் பாஶத்திற்கும் உரிய சென்னிமலை ஶைவஸித்தாந்த ஶிகரம் ஈஶான ஶிவாசார்ய ஸ்வாமிகளின் வழித்தோன்றல் ஶிரகிரி வேலவன் ஆலய ப்ரதான ஆசார்யர் ஶிவஸ்ரீ N.K. நடராஜ ஶிவாசார்யார் அவர்களின் குமாரன் செல்வச்சிரஞ்ஜீவி 'ஶிவாகம பாஸ்கர' சிரஞ்ஜீவி உமாபதி ஶிவம், கொல்லிங்கோடு ஸ்ரீ விஶ்வநாத ஸ்வாமி ஆலய அர்ச்சகர் வேத ஶிவாகம விற்பன்னர் ஶிவஸ்ரீ ஶரவண ஶிவாசார்யார் அவர்களின் புதல்வி ஸௌபாக்யவதி ஶிவரஞ்ஜனீ ஆகியோரது மணவிழாவில் மறைநூலாக ஶிவதீக்ஷா மாஹாத்ம்யம், ஶிவாகம மாஹாத்ம்யம், ஶிவாசார்ய மாஹாத்ம்யம், ஶிவபூஜா மாஹாத்ம்யம், ஶிவபக்த மாஹாத்ம்யம் , ஶைவ ஸந்யாஸ விதி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஶைவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம் எனும் நூல் வெளிவருகிறது.

இந்நூல் ஆதி எனத் தொடங்கி ஸங்க்ரஹம் என முடிவுற்றிருக்கிறது. ஆதி என்றால் தொடக்கம் முதலான எனவும், ஸங்க்ரஹம் என்றால் சுருக்கம். இந்த மலரானது

‘ஶைவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்’ தொடக்கம்தான். இத்யாதி (இதுமுதலான) அரியநூல்களின் தொகுப்புக்கள் ஶிவாசார்ய பாலகர்களுக்கு அவஶ்யமானதாகும்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

முன்னுரை

ஶிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம் எனும் இந்நூல் பல ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் அது நிறைவேறவில்லை. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாவது முறையாக வெளிவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆம் சென்ற 2012ஆம் ஆண்டு பரமபூஜ்யஸ்ரீ தயாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அவர்களின் ஶதாபிஷேக நினைவாகத் துவங்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக இந்நூல் தேவநாகரீ எழுத்தில் ஆங்கிலச் சுருக்கதுடன் வெளியிடப்பட்டது. பாண்டிச்சேரி ப்ரெஞ்சு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஶைவஸித்தாந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் டி. கணேஶன் அவர்கள் பதிப்பு அது.

இரண்டாவதாகிய இம்முறை க்ரந்தலிபியில் தமிழ்ச் சுருக்கத்துடன் வெளியிடப்படுவது மிகச் சிறப்பாகும்.

தனது திருமணத்தில் ஶிவாகமம் தொடர்பான நூல் ஒன்றை வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் எங்களது வித்யாலயத்தின் மூத்தமாணவர்களுள் ஒருவரான சென்னிமலை ஸ்ரீ உமாபதி ஶிவம் அவர்கள். அவரது வேண்டுகோளுக்கு இணங்கவே இந்நூல் வெளியிடப்படுகிறது.

நூல் முழுவதையும் தமிழ் மொழிப்பெயப்புடன் வெளியிடவேண்டும் என்று முயற்சி செய்தோம். ஆனால் அதைச் செய்ய இயலவில்லை. நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையாவது விரிவாக எழுதவேண்டும் என்று எண்ணியிருந்தேன். உடல் நலக்குறைவினால் எதிர்பார்த்த வண்ணம் அதைச் செய்ய இயலவில்லை. ஆனாலும் முடிந்த அளவிற்கு நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவையும் சுருக்கி எழுதியுள்ளேன். நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இன்றைய காலச் சூழ்நிலைக்கு மிகவும் தேவையானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஶைவாபிமானிகள் அனைவரும் இந்நூலை படித்து பயனடைய வேண்டுகிறேன்.

இந்நூலை வெளியிடும் சென்னிமலை ஆலய ப்ரதாந அர்ச்சகர் ஶிவஸ்ரீ நடராஜ ஶிவாசார்யர் அவர்களுக்கு என்னுடைய நமஸ்காரங்களையும், மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் வெளியிட உதவிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரன்புடன்

ஶிவசரணகமலைக ஶரண்யன்
ஶிவஸ்ரீ ஜி. கார்த்திகேய ஶிவம்
திருப்பரங்குன்றம்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

நூலாசிரியர் வரலாறு

ஶிவரகஸ்யத்திலும், பெரியபுராணம் முதலிய நூல்களிலும் போற்றப்படுகின்ற அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை அருளிய திருமூலநாயனார். அவர்

> மேருநடு நாடிமிக்கிடைபிங்கலை,
> கூருமில் வானினிலங்கைக்குறியுறுஞ்
> சாருந் தில்லைவனத்தண்மாமலயத்தூர்
> ஏறுஞ் சுழுமுனையிவைசிவபூமியே.

என்னும் பாடலிலும், உமாபதி ஶிவாசார்யார் திருவாய் மலர்ந்தருளிய,

> வலங்கைமான் மழுவோன்போற்றும் வாளரவரசை நோக்கி
> யலைந்திடும்பிண்டமண்டமவைசமமாதலாலே
> யிலங்கைநேரிடைபோமற்றையிலங்குபிங்கலையாநாடி
> நலங்கிளரிமயநேர்போநடுவுபோஞ்சுழுனைநாடி

என்னும் திருப்பாடலாலும், ப்ரஹ்மாண்டத்தின் இடைநாடியாயும், ஶிவபூமியாயும், ஸுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தமிழ்வேதமாகிய தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை எனப்படும் தக்ஷிண கைலாசம் முதலிய பல புண்ணிய ஸ்தலங்களை உடையதாயுள்ள ஈழமண்டலத்தின் உத்தரபாகத்துள்ள வீணாகான புரத்திலே, ஸ்ரீ சாலிவாடிநகரத்திலே,

கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராய பாண்டிமழவர் குலத்திலே நாநூறு வருஷங்களுக்கு முன்னே ஓர் சற்புத்திரர் அவதாரமாயினார்.

ஞானப்ரகாசர் என்னும் நாமதேயமுடைய இவர் இளம் வயதிலேயே பூர்வஜன்ம ஶிவபூஜா புண்ணிய பலத்தினாலே ஶிவநேசரோடு இணங்கி வாழ்ந்து, வந்தார்.

யாழ்ப்பாணத்தை பறங்கியர் எனும் போர்ச்சுகீசியர்கள் ஆண்டு வந்தனர். அவர்களின் தலைவன் நாள்தோறும் கோமாம்ஸம் உண்ணும் மஹாபாதகன் . நாள் தோறும் ஒவ்வொருவர் தனக்கு மாடு தரவேண்டும் என உத்தரவு பிறப்பித்திருந்தான். அவ்வகையில் ஞானப்ரகாசரின் முறைவரும் நாளுக்கு முந்நாள் இம்மஹாபாதகத்திலிருந்து எப்படி விடுபடுவது என்று யோசித்த அவர், கோவதைக்கு அஞ்சி அன்றிரவே தமதுதேசத்தை விடுத்து, தோணியேறி வேதாரண்யம் எனும் திருமறைக் காட்டினை அடைந்து இறைவனை தரிசனம் செய்து, பல தலங்களையும் தரிசனம் செய்தபின் திருப்புகலூரை அடைந்தார். அங்கு எழுந்தருளியிருந்த ஆதிஶைவராகிய ஸ்ரீபெரியண்ணா ஸ்வாமிக் குருக்களிடத்திலே தீக்ஷாஸம்ஸ்காரம் பெற்று ஆசாரங்களை முறையாக அனுஷ்டித்து வந்தார்.

பின்னர், பூலோக கைலாஸமாகிய சிதம்பர ஸ்தலத்தைச் சார்ந்து, திருவருள் வடிவினதாகிய ஶிவகங்கையிலே படிந்து, நித்யகன்மம் முடித்து, ஶிவகாமித்தாயார் ஸன்னிதியிலிருந்து, ஒருமித்த மனதோடு ஸ்ரீ பஞ்சதஶாக்ஷரீ மந்த்ரத்தை நியமமாக

நிர்ஜல உபவாஸத்தோடு ஜபித்து உபாசித்து, திருவருட் ப்ரஸாதம் பெற்று அங்கிருந்து கௌடதேசத்தை அடைந்தார்.

அங்கே ஸம்ஸ்க்ருத வித்வப்ராஹ்மண ஸந்யாஸி ஒருவர், மாணாக்கர் பலருக்குத் தர்க்க மீமாம்ஸ வேதாந்த ஶாஸ்த்ரங்கள் கற்பிப்பது கண்டு, அங்கே அவர் படிக்குந்தோறும் அவற்றை ஶ்ரவணம் செய்து வந்தார். அங்ஙனம் ஶ்ரவணஞ்செய்து வருங்காலத்தில் ஓர் நாள் ஆசிரியர் அவரை அழைத்து, 'நும் நாமம் யாது? நும் தேயம் யாது? இங்கு கற்பிப்பன உமக்கு மனனப்படுகின்றனவா? ' என்று கேட்டபோது, அவர் ஆம் என்று உத்தரஞ் செப்பியது கேட்ட ஆசிரியர் அத்யந்த ஆஶ்சர்யம் அடைந்து, அவர் திறமை அறிந்து அவரைத் தமது மாணாக்கருள்ளே முதல் மாணாக்கராக ஏற்றுக்கொண்டு கற்பித்து வருவாராயினார்.

ஒரு வருஷத்துக்குள்ளே எல்லாங்கற்று வல்லராயினமை கண்ட ஆசிரியர், 'நீவிர் ஶாஸ்த்ரம் இயற்றும் வல்லமை மெற்றீர்', என்று சொல்ல, அவரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு, திருக்கைலாஸ பரம்பரையிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து அப்போது அங்கு எழுந்தருளியிருந்த ஞானதேஶிகரிடத்திலே மந்த்ர காஷாயம் பெற்று, ஶிவாகமப் பொருள்களையெல்லாம் அறிந்தார்.

இந்த ஞானப்ரகாஶ முனிவர் பௌஷ்கராகம வ்ருத்தி, ஶிவஞானபோத வ்ருத்தி, ஸித்தாந்த ஶிகாமணி, ப்ரமாண தீபிகை, அஜ்ஞான விவேசனம், ஶிவயோக ஸாரம், ஶிவயோகரத்னம், ஶிவாகமாதி மாஹாத்ம்ய

ஸங்க்ரஹம் என்பவைகளை வடமொழியிலியற்றினார். தமிழில் தீக்ஷாலக்ஷணம், தத்வ வ்யாபார விவரணம், அவஸ்தா நிரூபணம், மஹாவாக்ய ஸங்க்ரஹணம் முதலியவைகளையும் ஶிவஞான சித்தியாருக்கு உரையையும் இயற்றினார்.

பிறகு, அங்கிருந்து சிதம்பர ஸ்தலத்தை அடைந்து வஸித்துவருங்காலத்திலே, ஓர் நாள் தமது அன்பருள் ஒருவர் தாம் இருந்த மடத்துக்கடுத்த நிலத்திலே பெருந்தொகைப் பொருளிருப்பது கண்டு அவருக்குத் தெரிவிக்க, அவர் அப்பொருள்கொண்டு அவ்விடத்திலே ஓர் பெரிய திருக்குளம் அமைத்தார். அக்குளம் ஞானப்ரகாச குளம் என்று அவர் பெயராலேயே வழங்குகிறது. அதன் ஸமீபத்திலே சில மடங்களும் அமைப்பித்து ஶிவஸமாதி நிலையில் இருந்து, ஓர் பங்குனிமாஸம் பூசநக்ஷத்ரத்தில் பரிபூரணதசை அடைந்தார்.

இவர் திருநெல்வேலியில் பிறந்ததால் ஶாலிவாடி ஞானப்ரகாஶர் என்றும், திருவண்ணாமலை ஆதீனத்தில் தீக்ஷைபெற்றதால் திருவண்ணாமை ஞானப்ரகாஶர் என்றும், சிதம்பரத்தில் பல நாட்கள் தங்கிப் பணிசெய்ததால் சிதம்பரம் ஞானப்ரகாஶர் என்றும் குறிப்பிடப்படுகிறார்.

உ

ஶிவமயம்

ஶிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்

கருத்துச் சுருக்கம்

ஶிவஞானக் கருவூலங்களாக விளங்குகின்ற ஶிவாகமங்களின் ஸாரத்தைப் பிழிந்து தருகின்ற நூல்கள் சில. அவ்வகையில் அமைந்தது யாழ்ப்பாணம் திருநெல்வேலி எனும் ஶாலிவாடிபுரம் 'ஸ்ரீ-ல-ஸ்ரீ ஜ்ஞாநப்ரகாஶ முனிவர்' இயற்றிய 'ஶிவாகமாதி மாஹாத்ம்ய ஸங்க்ரஹம்' எனப் பெயரிய இந்நூல். இதனுள்,

1. ஶிவாகம மாஹாத்ம்யம்
2. ஶிவதீக்ஷா மாஹாத்ம்யம்
3. ஶிவபக்த மாஹாத்ம்யம்
4. ஶிவாசார்ய மாஹாத்ம்யம்
5. சாதுர்வர்ண்ய-ஶைவாசார-மாஹாத்ம்யம்

ஆகியவற்றையும்,

1. ஶைவஸந்யாஸ விதி,
2. ஶிவபூஜாதிகார விதி
3. ஶிவாதிநிந்தாதோஷ ப்ரதிபாதக வாக்யங்கள்

போன்றவற்றையும் ஶிவாகமங்கள், புராணங்கள், ஸ்தலபுராணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அழகாக விளக்குகிறார் ஜ்ஞாநப்ரகாஶமுனிவர்.

1. ஶிவாகம மாஹாத்ம்யம்

ஶிவாகம ப்ராமாண்ய நிரூபணம்

ஶிவாகம மாஹாத்ம்யம் எனும் முதல் பகுதியில் அபௌருஷேயம் என்பதால் வேதங்கள் ப்ரமாணம் என்றும் ஶிவாகமங்கள் ஶிவபெருமானால் அருளப்பட்டதால் ப்ரமாணம் இல்லை என்றும் நிரீஶ்வரவாதிகள் கூறுகின்றனர். மேலும் சிலர் ஶிவாகமங்களை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டாலும், வேதமார்கத்தை விட்டு நழுவியவர்களுக்கே ஆகமம் கூறப்பட்டது என்று கூறுகின்றனர். கெட்ட புத்தியுடைய இவர்களது கொள்கையை ஶ்ரீமத் பௌஷ்கரம் என்னும் ஶிவாகம வாக்யத்தின் மூலமாக மறுத்து, வேதம் முதலான அனைத்து வித்யைகளுமே ஶிவபெருமானால் அருளப்பட்டதே என்பதை நிறுவுகிறார்.

வஞுவக்ஷுயொ ஸூ௷கா வஞுஹிவைஸ்தஃூவைாவி ।
வெஶாஶிஞ்ரு நூஜாஞ்ஞ யத்தக்ஷ ஸவ ூஓவஓக்ஷ வ்ரு ஹூ: ।
ஓரஷவிஞ்ரு ஹாஹ்ஹாஙாக்ஷ ஶிவாக்ஷ பாஓகாாணாக்ஷ ।
நாஓா௷வம் விநிஷ்க்ராஙம் ஶாஸ்த்ரம் ஸவ ூஜிதி ஷ்டிதஓ ।

என்ற வாக்யத்தின் மூலமாக அக்கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

வேதங்கள் மட்டுமின்றி ஶிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்ற ஆறுஅங்கங்கள், மீமாம்ஸா, ந்யாயம், புராணம், தர்மஶாஸ்த்ரம் ஆகிய உபாங்கங்கள், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்தஶாஸ்த்ரம் எனும் உபவேதங்கள் ஆகிய அனைத்து வித்யைகளுமே

ஶிவபெருமானால் அருளப் பட்டவையே என்பதை பல ஆகம புராண வசனங்களால் ஶிவாகமங்களின் ப்ராமாண்யத்தை நிறுவுகிறார்.

ஒவ்வொரு படைப்பின் துவக்கத்திலும் ஶிவபெருமான் வ்யாஸருக்கு புராணங்களை உபதேஶிக்க, அவர், அப்புராணங்களை ஒவ்வொரு த்வாபரயுகத்திலும் மக்களுக்கு உபதேஶிக்கிறார் என்பது ப்ரஸித்தம். அதுபோல, ஒவ்வொரு படைப்பின் துவக்கத்திலும் 28 ஆகமங்களை ஶிவபெருமான் உபதேஶிக்கிறார் என்பதை விளக்குகிறார்.

மேற்கூறிய காரணங்களின் மூலமாக வேதசிவாகமங்கள் ஶிவபெருமானால் அருளப்பட்டதால் தான் ப்ரமாணமேயன்றி, அக்ருதகம் எனும் அபௌருஷேயத்தினால் அல்ல, ஏனெனில் வேத ஶிவாகமங்கள் வர்ண-பத-வாக்ய ரூபமாக அமைந்திருப்பதால் அது ஶிவபெருமான் தனது கருணையினால் அருளிச் செய்தது என்பதை விளக்குகிறார்.

'இல்பொருள் தோன்றாது உள்பொருள் சிதையாது' எனும் ஸத்கார்ய வாதத்தின் மூலமாக வேதங்கள் நித்யம் என்று கூறினால் ஶிவாகமங்களும் அவ்வாறே ஆகும். எவ்வாறெனின், படைப்பின் முன் ஸூக்ஷ்மரூபமாக இருந்ததை படைப்பின் போது ஸ்தூலமாக்குதலாகிய அபிவ்யக்தியே அருளுதல் என்பதன் பொருள் ஆகும் என்பதையும் ஸூதஸம்ஹிதா வாக்யத்தின் மூலமாகத் தெளிவுபடுத்துகிறார். அவ்வாக்யமானது

வெஷொzநாஜிஃ ஶிவஷூஷ௰ வ௶ஜகஃ வ௱ஊயமூதஃ ।

ஜஹிவ௮ஜிஃவெஷைஷ௮வவ௹ணீதைத௮ூ௪௮தை ஸமூவையஃ

என்பதாகும். மேலும் ஶிவஸஹஸ்ர நாமத்தின் உரையில் அந்நூலாசிரியர் அலங்கார தீக்ஷிதர் 'க்ருதாகம:' எனும் நாமாவளிக்கு உரைசெய்யும்போது காமிகம் முதல் வாதுளம் வரையிலான 28 ஆகமங்கள் ஶிவனால் அருளப்பட்டன என்பதிக் குறிப்பிடுகிறார். அப்பய்ய தீக்ஷிதரும் தமது 'சதுர்வேத தாத்பர்ய ஸங்க்ரஹம்' எனும் நூலில் ஶிவபெருமானால் அருளப்பட்டதாலேயே வேதம் ஆகமம் இரண்டும் ப்ரமாணமாகிறது என்பதை விளக்குகிறார்.

வாயவ்ய ஸம்ஹிதா எனும் நூலின் மூலமாக இயல்பாகவே தோஷங்களற்றவராக விளங்குபவரும், ஸர்வஜ்ஞருமாகிய பரமேஶ்வரனால் அருளிச் செய்யப்பட்ட நிர்மலமான வாக்யங்கள் ப்ரமாணம் என்பதில் ஸந்தேஹமே இல்லை என்ற கருத்தை விளக்குகிறார்.

ஈஜாதாஶெஷஷொஷெண ஸவஜ்ஞெந ஶிவெந யக ।
வ௹ணீதஃஃமும் வாகூ௰ம் தக வ௹ஊணம் ந ஸம்ஶயஃ ॥

பிறகு, வேதஶிவாகமங்கள் ஆகிய இரண்டுமே ஶிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டதாலேயே ப்ரமாணமாகின்றன என்பதையும், ஶிவாகமங்கள் வேதங்களைப் போலவே ஸ்வதந்த்ர ப்ரமாணம் உடையவை, ஸ்ம்ருதி-புராணங்களைப் போல உபப்ருஹ்மணத்வம் உடையவை அல்ல என்பதையும் பல நூல்களின் அடிப்படையில் நிறுவுகிறார்.

ஶிவாகமங்கள் வேதஸாரம்

ஆனாலும், வேதங்களை மட்டும் ப்ரமாணமாகக் கொண்டு ஸ்ம்ருதிகளில் கூறப்படுகின்ற ஆசாரம் வைதிகம் என்றும், ஶிவாகமங்களின் வழியில் கூறப்படுகின்ற ஆசாரம் தாந்த்ரிகம் என்று கூறப்படும் என்றும், அவ்வாறு இரண்டு மார்கங்கள் இருப்பதால் ஶிவாகமங்கள் வேதவிரோதம் என்பது பொருளல்ல அவை வேதஸாரமே என்பதை விளக்குகிறார்.

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌶𑌿𑌵𑍇𑌨 𑌪𑌰𑌿𑌭𑌾𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌂 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ।

என்ற வாக்யம் ஶிவாகமங்கள் வேதஸாரம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

பிறகு, வேதஸாரமாகிய ஶிவாகமங்களும் இரண்டு வகைப்படும். அவை ஶ்ரௌதம் அஶ்ரௌதம் எனப்படும். அதாவது ஶைவம், பாஶுபதம், ஸோமம், லாகுலம் எனும் நான்கு ஶைவபேதங்களுள், ஶைவம் அஶ்ரௌதம் என்றும், பிற மூன்றும் ஶ்ரௌதம் என்றும் பெயர் பெறும். ஏனெனில், பாஶுபதம் முதலான மூன்று மதங்களும் ஶ்ருதியை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் ஶைவம் ஶ்ருதிஸாரமானது என்றும் கூறுகிறார். மேலும், பாஶுபதம் முதலான மதங்கள் ரௌத்ரம் என்றும், ஶைவம் ஸௌம்யமானது என்பதையும் என்றுவிளக்குகிறார்.

பிறகு, ஶாஸ்தரங்கள் அனைத்திலும் ஶிவ ஶாஸ்த்ரமாகிய ஶிவாகமங்கள் மிகவும் உத்க்ருஷ்டம் =

மேலானவை என்பதைப் பல வாக்யங்களின் மூலமாக விளக்குகிறார். அப்போது அனைத்து ஶாஸ்த்ரங்களுமே ஶிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டது என்ற கருத்துக்கு இது முரணாக அமையுமோ என்ற கேள்வி கேட்டு, அதற்கு அனைத்து ஶாஸ்த்ரங்களுமே அவரால் அருளிச் செய்யப்பட்டவை தான். ஆனால், மனதின் பக்குவத்திற்கேற்ப பல ஶாஸ்த்ரங்கள் ஶிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன. அவை அனைத்தையும் தாண்டி ஶக்திநிபாதம் வந்த உத்தமர்களாகிய ஜீவர்களுக்கு தமது ஊர்த்வமுகமாகிய ஈஶானமுகத்தின் மூலமாக அருளிச் செய்யப்பட்ட ஶிவாகமங்கள் மிகமிக உயர்ந்தவை என்பதினை விளக்குகிறார்.

𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌖𑍍𑌯𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑍇𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌯𑍇 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑍇 𑌵𑌸𑌵𑌃 𑌸𑍂𑌤𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮 𑌇𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।

பிற ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்துமே ஶிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. ஶிவாகமங்களில் எந்த விஷயமானது கூறப்படவில்லையோ அதை எந்த ஶாஸ்த்ரத்திலும் காணமுடியாது என்ற வாயுஸம்ஹிதா வசநத்தின் மூலமாக ஶிவாகமங்களின் மஹிமையை கூறுகிறார்.

இக்கருத்தையே 'சைவமாம் சமயம் சாறும் ஊழ்பெறல் அறிது' என்று குறிப்பிடுகிறார் ஸ்ரீமத் அருள்நந்தி சிவம்.

பிறகு ஶாஸ்த்ரங்கள் அனைத்தும் லௌகிகம், வைதிகம், அத்யாத்மம், அதிமார்கம், மந்த்ரம் எனும்

ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதை ஶ்ரீமத் காமிக ஆகமத்தின் வாக்யங்களின் மூலமாக விளக்குகிறார்.

மேலும், காமிகம் முதலான ஆகமங்கள் ஶிவபெருமானது ஊர்த்வமுகத்திலிருந்து தோன்றியவை. பிற ஶாஸ்த்ரங்கள் ஹ்ருதயம், கண்டம் முதலான அங்கங்களில் இருந்து தோன்றியவை. அவை அனைத்தும் பூர்வபக்ஷமாகப் பெருமானால் சொல்லப்பட்டன. ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் விடத்தக்க பொருள்களை நிர்ணயம் செய்வதில் மிகமிகச் சரியாக இருப்பது ஶிவபெருமானது வாக்காகிய ஶிவாகமங்களே என்பதையும் கூறுகிறார். அவை

காமிகாதி³ ஶிவஜ்ஞானம் ஊர்த்⁴வாத்³ ப⁴க³வத: ஶ்ருதா ।
இதராணி ச ஶாஸ்த்ரே ஹ்ருத³யாத்³யங்க³ஜானி வை
பூர்வபக்ஷதயா தானி கதி²தானீஹ ஶம்பு⁴னா ।
ஹேயோபாதே³யவஸ்தூனாம் நிர்ணயே வாக்யமூர்த்⁴வத: ।
தத்³வாக்யஸ்வீக்ருத: ஶிவவிஜ்ஞான ஸம்மித: ।

இதுபோன்ற பல கருத்துக்கள் இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

2. ஶிவதீக்ஷா மாஹாத்ம்யம்

இப்பகுதியில், ஶிவாகமங்களைப் படிப்பதற்கான தகுதியே தீக்ஷையினால் தான் ஏற்படுகிறது, மோக்ஷமும் தீக்ஷையினால் தான் ஏற்படுகிறது என்பதையும், தீக்ஷையின்றிச் செய்யப்படுகின்ற அனைத்துக் க்ரியைகளும் வ்யர்த்தம் = பயனற்றது என்பதையும் விளக்குகிறார். ஜ்ஞானத்தினால் மோக்ஷம் என்று

வருகின்ற வாக்யங்களில் ஜ்ஞாநம் என்ற சொல்லுக்கு தீக்ஷை முதலானவற்றால் என்று பொருள் கொள்ளவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

தீக்ஷை பெற்றுக்கொள்ளாமல் மோக்ஷத்தை விரும்புவது கண் தெரியாத ஒருவன் பிடிவாதமாக் கைத்தடி இல்லாமல் பயணம் செய்ய முற்படுவது போல் ஆகும் என்றும், தோணியின்றிக் கடலைக் கடக்க முற்படுவது போலும் ஆகும் என்றும் கூறி, ஷடத்வஶுத்தி எனும் தீக்ஷையினாலேயே முக்தி ஏற்படும் வேறுவழியே இல்லை என்று கூறும் ஶ்லோகங்கள் தீக்ஷையின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

தீக்ஷையினால் ஶிவாகமங்களைக் கேட்பதற்கு அதிகாரமும், பூஜைசெய்யத் தகுதியும், ஆஶ்ரம தர்மங்களில் அதிகாரமும், ஞானமும், ஸித்தியும் ஏற்படுகிறது என்ற ஷட்ஸஹஸ்ரிகா வசனம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாக அமைந்துள்ளது.

அடுத்து, ஸ்வயமாகவே ஜீவனில் சிறிது விளங்கிக் கொண்டிருக்கின்ற ஶிவஜ்ஞானம் தீக்ஷா எனும் ஶிவஶக்தி வ்யாபாராத்மகமான க்ரியையினால் முழுவதுமாக ப்ரகாஶிக்கின்றது என்பதை பராக்யம் எனும் ஆகம வாக்யத்தின் மூலமாக விளக்குகிறார்.

காட்டிற்குள் சிங்கத்தைக் கண்ட யானை எவ்வாறு பயந்து காணப்படுமோ, அதுபோல ஶிவதீக்ஷை பெற்றுக்கொள்ளாதவர்கள் ஶிவனை பூஜை செய்தால் பெருமான் பயந்து நடுங்குவார் என்பதைக் கூறுகிறார்.

யஶா ஜ௲மவதிம் ஓரஷ்வா வநெ ஹீதொ மஜஸ்தயா ।
ஃஃஷிதாசிூதம் ஶ்ரீஜ்ஞம் ஓரஷ்வா ஹீதொ ஜஹைஶ்வாஃ॥

பிறகு தீக்ஷையின் மஹிமைகளை பல ஆகம புராண ஶ்லோகங்களின் மூலமாக விளக்குகிறார்.

3. ஶிவபக்த மாஹாத்ம்யம்

மூன்றாவதாகிய இப்பகுதியில் ஶிவாகமங்கள் ஶிவதீக்ஷை பெற்றவர்கள் மட்டுமே படிக்கவேண்டும் என்பதை ஸுப்ரபேதாகம வாக்யங்களைக்கொண்டு விளக்குகிறார்.

தீக்ஷை பெறாதவர்கள் ஆகமங்களைப் படிப்பதால் அரசுக்குக் கெடுதியுண்டாகும் என்று காமிகாகம வசனத்தைக் கூறுகிறார்.

பிறகு, தீக்ஷை பெற்ற நான்கு வர்ணத்தாருக்குமே ஶிவத்வம் என்ற நிலையானது சித்திக்கிறது என்பதைப் பல ஆகமங்களின் மூலமாக நிறுவுகிறார்.

4. ஆதிஶைவ-ஶிவாசார்ய மாஹாத்ம்யம்

நான்காவதான இப்பகுதியில் ப்ரதிஷ்டை முதலான க்ரியைகளைச் செய்வதற்கு ஆதிஶைவர்களுக்கே அதிகாரம் என்பதைப் பல ஆகம வாக்யங்களின் மூலமாகக் கூறுகிறார்.

ஶிவபெருமானால் நேரடியாக தீக்ஷை செய்விக்கப்பெற்ற ஐந்து கோத்ரங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஸாந்தாநிக ஶிவத்விஜர்கள் என்று

பெயர் என்பதை ஸ்ரீமத் காமிகாகமத்தின் வாக்யத்தால் விளக்குகிறார்.

ஸாமாந்ய ப்ராஹ்மணர்கள் பிழைப்புக்காக ஶிவபெருமானைப் பூஜிப்பார்களேயானால் அவர்கள் ஆறுமாதங்களில் வீழ்ச்சியை அடைவார்கள் என்றும், தேவலகத்வம் எனும் தோஷம் அவர்களுக்கு ஏற்படும் என்றும், ஶிவபெருமானால் தீக்ஷிக்கப்பெற்ற ஆதிஶைவர்களுக்கு பரார்த்த பூஜை என்பது ஶிவபெருமானின் கட்டளையால் உண்டானதால் அவர்களுக்கு தோஷம் இல்லை என்பதையும் விளக்குகிறார்.

ஆதிஶைவர் அல்லாதவர்கள் பூஜை செய்வது தவறு. ஆனால் அவ்வாறு ஒரு விபரீதம் நடைபெறும்போது அரசன் அதைப் பார்த்துக்கொண்டு கவனிக்காமல் இருந்தால், அவ்வரசன் அழிவான் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை என்ற காமிகாகம வாக்யம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிறகு, ஆதிஶைவர்களுக்கு, ஶிவப்ராஹ்மணர், ஸ்தாபகர், தேஶிகர், குரு போன்ற பெயர்கள் என்ன காரணத்தால் அமைந்தன என்பதை விளக்குகிறார்.

பிறகு, அநாதிஶைவர், ஆதிஶைவர், மஹாஶைவர், அநுஶைவர், அவாந்தரஶைவர் எனும் ஐந்துவிதமான ஶைவர்கள் யார் என்பதைக் கூறுகிறார்.

எந்த நாட்டில் ஶிவாகமக் கருத்துக்கள் நித்யமும் உபதேஶிக்கப்பட்டுக் கடைபிடிக்கப்படுகிறதோ அந்த

நாடு வளர்ந்துகொண்டே இருக்கும். அந்நாட்டின் அரசன் பேரரசனாவான்

5. சாதுர்வர்ண்ய ஶைவாசார்ய விதி

இப்பகுதியில் ப்ராஹ்மணர் முதலான நான்கு வர்ணத்தார்களுக்குமே ஆசார்யத்வம் உண்டு என்பதைப் பல ஆகம வாக்யங்களின் மூலமாக நிறுவுகிறார்.

நான்குவர்ணங்களிலுமே க்ருஹஸ்தரே ஆசார்யர் இருப்பதற்கான சிறப்புத் தகுதியுடைவர் ஆவார் என்றும், ஆனால் ப்ரஹ்மசாரியும் ஆசார்யராக இருக்கலாம் என்பதும் காணப்படுகிறது.

மோக்ஷத்தை மட்டும் விரும்புபவர்களுக்கு ப்ரஹ்மசாரி குருவாக இருக்கலாம், ஆனால் க்ருஹஸ்தர் போக-மோக்ஷங்களை விரும்பும் இருவருக்குமே குருவாக இருக்கக் கூடிய தகுதியுடையவர் என்றும் கூறப்படுகிறது.

நிறைவாக எந்த வர்ணத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த லக்ஷணங்களும் இல்லாமல் இருந்தாலும், ஶிவஜ்ஞானம் உடையவர்களாயின் அவர்கள் சிறந்த குருவே ஆவர். அவரிடம் இவன் இந்த வர்ணத்தவன் அந்த வர்ணத்தவன் என்ற ஆராய்ச்சியைச் செய்கின்ற மனிதன் மஹாபாதகன் ஆவான் என்று ஶ்ரீமத் காமிகாகம வசநம் விளக்குகிறது

6. சாதுர்வர்ண்ய ஸந்யாஸ விதி

இப்பகுதியில் சிந்த்யவிஶ்வம் எனும் ஆகமத்தின் அடிப்படையில் தபஸ்வீ, விதுஷ:, வித்வான் ஆகிய மூன்றுவகையான ஸந்யாஸிகளின் இலக்கணமானது விளக்கப்படுகிறது.

முதலில் தபஸ்வீ எனும் ஸந்யாஸியானவன் எப்பொழுதும் தவம் செய்துகொண்டு இருப்பவனாகவும், பிறக்கு உபதேஶம் செய்தல், ஸங்கல்பம் செய்துகொள்ளல், பிறரிடம் உபதேஶம்பெறுதல், ஶிஷ்யர்களை சேர்த்துக்கொள்ளுதல், ஶாஸ்த்ரபோதனம் செய்தல், ஸம்ஸ்க்ருதபாஷை பேசுதல், தண்டம் கமண்டலு ஆகியவற்றை வைத்துக்கொள்ளுதல் போன்றவற்றைச் செய்யாமல், க்ஷணிகலிங்கத்தில் ஶிவனை பக்தியுடன் பூஜை செய்துகொன்டு, மனிதநடமாட்டம் இல்லாத பகுதியில் தனியாக, ஜனங்களைக் காண்பதில் பயம் உள்ளவனாக, கையையே தலையணையாக வைத்துக்கொண்டு, ஏதாவது ஒரு வஸ்த்ரத்தை உடுத்திக்கொண்டு, கிடைப்பதை சாப்பிட்டுக்கொண்டு, கைகளையே பாத்ரமாகக் கொண்டு யாசிக்கப்பெற்ற அன்னத்தைக் கொண்டு ஜீவனம் செய்பவன் தபஸ்வீ ஸாதகன் எனும் பெயரை உடையவன் ஆவான்.

விதுஷ:எனும் யதிக்கு, ஜ்ஞான ஶாஸ்த்ரங்களைப் படித்தல், போதித்தல், கேட்டல், சிந்தித்தல் ஆகியவை கடமையாகும்.

வித்வான் எனும் யதிக்கு ஆசார்யாபிஷேகம் செய்துகொண்டு ஶிவசிந்தனமும், ஶிவாகமபோதனமும் செய்தல் கடமையாகும் என்று கூறப்படுகிறது.

ஸூதஸம்ஹிதா, கிரணம் முதலான நூல்களில் மேற்கூறிய ஸந்யாஸவிதியானது வேறுவிதமாகவும், வேறுபெயர்களிலும் காணப்படுகிறது. மேலும் அவர்கள் மரித்தால் செய்யவேண்டிய புதைத்தல் அல்லது எரித்தல் ஆகியவற்றின் க்ரமம் விளக்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறார்.

க்ருதயுகத்தில் ப்ராஹ்மண ஸந்யாஸியும், த்ரேதா யுகத்தில் க்ஷத்ரிய ஸந்யாஸியும், த்வாபரயுகத்தில் வைஶ்ய ஸந்யாஸியும், கலியுகத்தில் ஶூத்ர ஸந்யாஸியும் உயர்ந்தவர்கள் என்னும் கருத்து ப்ரஹ்மாண்டம் முதலான புராணங்களில் காணக் கிடைக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

ஶைவத்தில் க்ருஹஸ்தர், ப்ரஹ்மசாரீ என்ற இரண்டு ஆஶ்ரமிகள் மட்டுமே குருவாக முடியும், வாநப்ரஸ்தரும் ஸந்யாஸியும் முடியாது என்று ஸர்வஜ்ஞானோத்தரமும், வாநப்ரஸ்தர் மற்றும் ஸந்யாஸிகளுக்கு குருத்வம் இல்லை என்ற காலோத்தர வசனமும், பாவம், த்ரவ்யம், அக்னி இவை மூன்றையும் விட்டவர்கள் ஆதலால், தீக்ஷை ப்ரதிஷ்டை ஆகியவற்றில் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்ற ஸுப்ரபேதாகம வசனமும், வாநப்ரஸ்த-யதிகளை குருவாக ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் அவர்களுக்கு க்ரியாவதீ தீக்ஷையில் தான் அதிகாரம் இல்லையேயன்றி ஜ்ஞாநவதீ தீக்ஷையில் அதிகாரம் உண்டு, குருத்வமும் உண்டு என்பதி ஸந்யாஸதீபிகா எனும் நூலின் வாயிலாக நிறுவி இப்பகுதியை நிறைவு செய்கிறார் ஜ்ஞானப்ரகாஶ முனிவர்.

7. ஶிவபூஜாதிகார விதி

இப்பகுதியில் ஶிவபூஜை செய்கின்ற நான்கு வர்ணத்தாரும் கொள்ளவேண்டிய ஆசாரங்களைக் குறிப்பிடுகிறார்.

முதலில் அந்தணர்கள் முதலான நான்கு வர்ணத்தவர்களும் முறையே, வெள்ளை, சிவப்பு, மஞ்ஜள், கருப்பு ஆகிய வர்ணங்களைக் கொண்ட ஶிவலிங்கத்தை வைத்து வழிபட வேண்டும் என்பதை ரௌரவாகம வாக்யம் விளக்குகிறது.

இக்கருத்தை ஒட்டியே திருமந்திரப் பாடல் ஒன்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அப்பாடல்

மறையவர் அர்ச்சனை வண்படிகந்தான்
இறையவர் அர்ச்சனை யேயபொன் னாகும்
குறைவிலா வசியர்க்குக் கோமள மாகும்
துறையுடைச் சூத்திரர் தொல்வாண லிங்கமே

- பாடல் எண் 1721, திருமந்திரம்

பிறகு, மேற்கூறியவண்ணமின்றி நான்கு வர்ணத்தாருமே கருப்பு அல்லது வெள்ளைவர்ணமான பாணலிங்கத்தை வைத்துப் பூஜை செய்யலாம் என்பதை மானஸாரம், காலோத்தரம் முதலான ஆகமங்கள் தெரிவிக்கின்றன.

அதுபோலவே, அந்நால்வரும் முறையே அஷ்டாஶ்ரம், ஷடஶ்ரம், சதுரஶ்ரம், வ்ருத்தம் ஆகிய வடிவங்களைக் கொண்ட பீடத்தை அமைத்துக்கொள்ள வேண்டும், அல்லது அனைவரும் வ்ருத்த பீடத்தை

வைத்துக் கொள்ளலாம் என்பதை ஸூக்ஷ்மாகம வாக்யத்தினால் குறிப்பிடுகிறார்.

பிறகு, அதேவகையில் ரஸலிங்கம், ரத்நலிங்கம், ஸ்வர்ணலிங்கம், ஶிலாலிங்கம் ஆகியவை நான்கு வர்ணத்தாருக்கும் உகந்தது என்றும், ஸ்படிகமும் பாணமும் அனைவருக்கும் உகந்தது என்றும் காணப்படுகிறது.

பெண்களில் கணவருடன் கூடியவர்களுக்கு மண்மயமான லிங்கம் என்றும், விதவைகளுக்கு ரஸலிங்கம் போன்றவை என்றும் உள்ளது.

பாலையானாலும், யௌவனையானாலும், வ்ருத்தையானாலும் பெண்களுக்கு ஶுத்தமான ஸ்படிக லிங்கம் விரைவில் பலனளிக்கவல்லதாகும் என்று வித்யாஸார ஸம்ஹிதா எனும் நூல் கூறுகிறது.

நிறைவாக நான்கு வர்ணத்தவர்களும் ஆத்மார்த்த் பூஜை செய்யலாம் பரார்த்தபூஜை செய்யக்கூடாது என்பது காணப்படுகிறது.

8. ஶிவாதி நிந்தா-தோஷ-ப்ரதிபாதக வசநாநி

வேதங்கள், ஆகமங்கள், விபூதி, ருத்ராக்ஷம், ஶிவஜ்ஞானிகள், ஶிவபுராணம், ஆகிய ஶிவபெருமான் தொடர்பான எதையும் எவன் நிந்திக்கிறானோ அவன் மூடன், ஶிவத்ரோஹீ என்று அழைக்கப்படுவான் என்பதையு உபதேஶ காண்டம் என்ற நூலின் வாக்யங்களினால் விளக்குகிறார்.

தொடர்ந்து மேற்கூறிய செயல்களைச் செய்பவர்கள் அருகிலே வஸித்தில், அவர்கள் சொல்வதைக் கேட்டல், அவர்களைத் தொடுதல், அவர்களுடன் பேசுதல் ஆகியவையும் ஶிவத்ரோஹமே ஆகும் என்பதையும் விளக்குகிறார் .

ஶிவதீக்ஷை பெற்றுக்கொண்டு ஶிவாஶ்ரமியாக = என்னைச் சார்ந்தவனாக இருக்கின்றவனை வெறுப்பது என்னை வெறுப்பது போலவே ஆகும். அதுபோல என்னைச் சார்ந்தவர்களை ஸந்தோஷப்படுத்தினால் என்னை ஸந்தோஷப்படுத்தியதாகவே ஆகும் என்று பரமேஶ்வரனே கூறுவதாக அமைந்துள்ளது உபதேஶ காண்ட ஶ்லோகம்.

ஶிவனையும் ஶிவஶாஸ்த்ரத்தையும் நிந்தை செய்யும் மூடனுக்கு பரிஹாரம் எந்த ஶாஸ்த்ரத்திலும் யாராலும் கூறப்படவில்லை என்கிறது காஶீகண்டம்.

கஹ்லிவெஜஹவிஜ்ஞாநம் ஷ்தியொ வா வ ஷஸ் வா।
வணாமூராஜவஸசாவாஉஷ்தஸ் நாவெஷ்தவ ஸூவஜா ।
கவிஜ்ஞாயாதவிஜ்ஞாநம் ஷ்வணாமூராஜஸாஷ்திகா: ।
ஜஹாதி ய: ஸ ஜஊஜாதா வததெவ ந ஸம்ஶய: ।

யாருக்கு ப்ரஹ்மஜ்ஞானம் = ஶிவஜ்ஞானம் உண்டாகிவிட்டதோ அவர்கள், பெண்ணானாலும் ஆணானாலும் அவர்களுக்கு வர்ணாஶ்ரம ஆசாரங்கள் எப்போதும் கிடையாது. ஆனால் ஞானம் ஏற்படாமல் எவன் தனது வர்ணாஶ்ரம ஆசாரங்களை கடைபிடிக்காமல் இருக்கின்றானோ அவன் அழிவை

அடைவான் என்பதி ஐயமில்லை என்ற ஸூதஸம்ஹிதா வசனம் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாக அமைந்துள்ளது.

ஶிவசிஹ்நங்களாகிய விபூதி ருத்ராக்ஷம் ஆகியவற்றை அணியாமல் செய்யப்படும் க்ரியைகள் யாவும் பலனற்றவையாகிவிடுகின்றன என்பதை மனுஸ்ம்ருதி, வ்ருத்தாசல மாஹாத்ம்யம், அம்ஶுமானாகமம் ஆகியவை விளக்குகின்றன.

எனவே ஶிவாகமங்களில் கூறப்பட்ட ஆசாரங்களை முறையாகக் கடைபிடிப்பவர்கள் வாழ்வில் உத்தமமான நிலையை நிஶ்சயமாக அடைகிறார்கள் என்ற வாக்யத்துடன் நூல் நிறைவடைகிறது

𑌅𑌤𑌃 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌚𑌾𑌰𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌃 ।
𑌨𑌰𑌾𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌂𑌸𑌿 𑌭𑍂𑌯𑌾𑌂𑌸𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍।

உ

𑌶𑍍𑌰𑍀 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃

𑌉𑌪𑌯𑍁𑌕𑍍𑌤 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥 𑌵𑌿𑌵𑌰𑌣𑌮𑍍

1. 𑌅𑌜𑌿𑌤𑌾𑌗𑌮𑌃
2. 𑌅𑌰𑍁𑌣𑌾𑌚𑌲𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍
3. 𑌅𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑌾𑌗𑌮𑌃
4. 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌗𑌮𑌃
5. 𑌉𑌪𑌦𑍇𑌶𑌕𑌾𑌣𑍍𑌡𑌃
6. 𑌏𑌕𑌾𑌮𑍍𑌰𑌨𑌾𑌥𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍
   (𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)
7. 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍁𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍
   (𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)
8. 𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌗𑌮𑌃
9. 𑌕𑌾𑌰𑌣𑌾𑌗𑌮𑌃
10. 𑌕𑌾𑌲𑌹𑌸𑍍𑌤𑌿𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 (𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)
11. 𑌕𑌾𑌲𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌗𑌮𑌃
12. 𑌕𑌿𑌰𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃
13. 𑌕𑌿𑌰𑌣𑌾𑌗𑌮𑌃

14. 𑌗𑌣𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾

(𑌶𑍈𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)

15. 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌯𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃

16. 𑌚𑌿𑌦𑌂𑌬𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 (𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌃)

17. 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌗𑌮𑌃

18. 𑌜𑌾𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃

19. 𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃

20. 𑌯𑌜𑍁𑌃𑌸𑌂𑌹𑌿𑌤𑌾

21. 𑌪𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌗𑌮𑌃

22. 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌪𑍁𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍

23. 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑌾𑌗𑌮𑌃

24. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍

25. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌖𑌣𑍍𑌡𑌃

26. 𑌮𑌕𑍁𑌟𑌾𑌗𑌮𑌃

27. 𑌮𑌕𑍁𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌗𑌮𑌃

28. 𑌮𑌤𑌙𑍍𑌗𑌾𑌗𑌮𑌃

29. 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑌃

30. 𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃

31. 𑌮𑍋𑌹𑌶𑍂𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌃

32. 𑌮𑍋𑌕𑍍𑌷𑌕𑌾𑌰𑌿𑌕𑌾

33. 𑌯𑍋𑌗𑌜𑌾𑌗𑌮𑌃

34. 𑌰𑌾𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 (𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)

35. 𑌰𑍌𑌰𑌵𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃

36. 𑌰𑍌𑌰𑌵𑌾𑌗𑌮𑌃

37. 𑌵𑌰𑍁𑌣𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃

38. 𑌵𑌾𑌮𑌨𑌪𑍁𑌰𑌾𑌣𑌃

39. 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌸𑌂𑌹𑌿𑌤𑌾

40. 𑌵𑌾𑌸𑌿𑌷𑍍𑌠𑌲𑍈𑌙𑍍𑌗𑌃

41. 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑌾𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾

42. 𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌪𑍁𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍
(𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)

43. 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍
𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑌃
(𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌪𑍁𑌰𑌾𑌣𑌸𑌾𑌰𑌃)

44. 𑌵𑍀𑌰𑌾𑌗𑌮𑌃

45. 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌚𑌲𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍

46. 𑌵𑍇𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍

47. 𑌶𑌿𑌲𑍍𑌪𑌃

48. 𑌶𑌿𑌵𑌯𑌜𑍍𑌞𑌃

49. 𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌃

50. 𑌶𑍈𑌵𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑌰𑌃

51. 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 (𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌃)

52. 𑌷𑌟𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑌾

53. 𑌹𑌾𑌲𑌾𑌸𑍍𑌯𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍

54. 𑌹𑍇𑌮𑌸𑌭𑌾𑌨𑌾𑌥𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍

(𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍)

55. 𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌗𑌮𑌃

56. 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌗𑌮𑌃

57. 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑍇𑌦𑌾𑌗𑌮𑌃

58. 𑌸𑍂𑌤𑌗𑍀𑌤𑌾

59. 𑌸𑍂𑌤𑌸𑌂𑌹𑌿𑌤𑌾

60. 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌗𑌮𑌃

61. 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌜𑍀𑌵𑌿𑌕𑌾

62. 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇 𑌕𑌾𑌶𑍀𑌖𑌣𑍍𑌡𑌃

63. 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌾𑌪𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌮𑍍

64. 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑌃

65. 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇 𑌸𑌂𑌭𑌵𑌕𑌾𑌣𑍍𑌡𑌃

66. ஸ்ம்ருதி:

67. ஸ்வச்சந்த:

68. ஸ்வாயஂபுவாகம:

Śivāgamādimāhātmyasaṃgraha

Śivāgamādimāhātmyasaṃgraha, as the name indicates, is a compilation of passages from the Purāṇa-s and the Śaivāgama-s with a view to prove and establish the validity of the Śaivāgama-s. Along with that the author, Jñānaprakāśa, adds his own explanatory comments. The author is a resident of the holy town *Tirunelveli* *(Salivati)* in Jaffna, SriLanka who lived between the later part of the 16th century and the beginning part of 17th century.

This text is so far unpublished. It consists of 5 divisions:

1. Śivadīkṣāmāhātmyam
2. Śivabhaktamāhātmyam

3. Śaivācāryamāhātmyam
4. Cāturvarṇyaśaivamāhātmyam
5. Cāturvarṇyasaṃnyāsavidhi

Jñānaprakāśa begins the text by stating the views of opponents of the Āgama. According to them, while the Veda-s are fully valid since they have not been taught by a human being at a particular time, the Āgama-s are not so. Jñānaprakāśa refutes this view by citing from the *Pauṣkarāgama* which states that all the scriptures existed in the form of subtle sound (nāda) in Śiva, the supreme cause who taught the four Veda-s by His four faces and taught the Śaivāgama-s through His fifth one. Further, as clearly stated in the *Vāyusaṃhitā* and the *Sūtasaṃhitā*, the eighteen knowledgesources (aṣṭādaśavidyāsthāna)--comprising the four Veda-s, the six auxiliaries (aṅga) such as the śikṣā, vyākaraṇa, etc., the vedic exegetics (mīmāṃsā, logic (nyāya), the holy legends (puraṇa), the entire corpus of laws and personal conduct (dharmaśāstra), the science of medicine (āyurveda), the science of warfare (dhanur-veda), the books of music (gāndharvaveda) and the science of economics and commerce (arthaśāstra)—were all taught at the beginning by Śiva. Moreover, at the beginning of each creation of the world, Śiva teaches the eighteen purāṇa-s to Vyāsa, the son of Satyavatī, who in his turn teaches them in each Dvāparayuga of each aeon (*kalpa*). In the same way, Śiva the supreme God, teaches the twenty eight Śaivā-gama-s beginning from *Kāmika,* at the commencement of each creation of the world. Therefore, both the Veda-s and the Śaivāgama-s have validity only because they have been revealed by Śiva, the supreme benefactor (paramāpta). Jñānaprakāśa adduces the syllogistic argument: The Veda-s and the Śaivāgama-s were brought out by Śiva and are composed of letters and sentences just as the poetic works of Kālidāsa and others. The crux of the argument is that the Veda-s are valid because they were revealed by Śiva and not due to the belief that they are of superhuman origin or that they were uncreated as held by the mīmāṃsaka-s. This has been clearly explained by the *Sūtasaṃhitā*. In fact this is the basic view accepted by most of the śaiva ācārya-s. Not only so but this view was first propounded in the ealiest śaiva scripture, *Śvetāśva-taropaniṣad.* We read in its penultimate verse so unequivocally:

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तँ ह देवमात्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ।

This has been correctly pointed out by Nīlakaṇṭhadīkṣita, one of the greatest śaiva stalwarts of the 17th century in one of his great works, *Śivatattva-rahasya* which is a detailed commentary on the *Śivāṣṭottaraśatanāmastotra* that forms part of the *Śaṃkarasaṃhitā* of the *Skandapurāṇa*. Nīlakaṇṭhadīkṣita ably argues for the validity of all the purāṇa-s setting aside the baseless claim of some of the vaiṣṇava-s according to whom those purāṇa-s that extol Śiva as the highest god are to be considered as tāmasic in their content as they have been given out by Brahmā in one of the kalpa-s when he was under the spell of tamoguṇa.

The Āgama-s of the Śaivasiddhānta school are also revealed by Śiva, independent of the Veda-s; they do not contradict the Veda-s and are equally valid as attested by many texts such as the *Vāyavīyasaṃhitā* of the *Śivamahāpurāṇa*, the *Kāmikāgama*, the *Makuṭāgama*, etc. Jñānaprakāśa interprets the expression 'vedasāra' occurring in these Āgama-s as that the Śaivāgama-s expound those subject which are not explained in the Veda-s and elaborate those that are mentioned briefly in the Veda-s[1]. Jñānaprakāśa cites the well known *Kāmikāgama* passage

> लौकिकं वैदिकं चैव तथाध्यात्मिकमेव च ।
> अतिमार्गं च मन्त्राख्यं तन्त्रमेकमनेकधा ॥

Which divides the entire scriptural corpus into five broad categories by classifying the Śaivāgama-s as the 'mantra' system. Jñānaprakāśa in his remark observes, on the authority of *Rauravavṛttiviveka*, a lost work of Rāmakaṇṭha,[2] and the *Pauṣkarāgama*, that all the scriptures of the different systems are valid within their own limited conceptions and putting them all in a hierarchical and ascending order of merit and validity, the Śaivasiddhānta is the highest and supreme one as the fruit it offers in the form *mokṣa* is the highest conception. The Śaivāgama-s should be completely distinguished from those tantra-s which enjoin unvedic and abhorring practices and are therefore not valid.

---

[1] Śrīkumāra, in his commentary Tātparyadīpikā on the Tattvaprakāśa (verse, 5) of King Bhoja, argues elaborately in similar fashion for proving the validity of the Śaivāgama-s.

[2] Rāmakaṇṭha is one of the greatest śaivasiddhānta ācārya-s that lived in Kashmir in

In the second chapter Jñānaprakaśa discusses the greatness and the unique importance of the *dīkṣā* as expounded in the

---

the 9th century who had composed some of the very important commentaries on the Mataṅgapārameśvarāgama, Kiraṇāgama as well as on the Nareśvaraparīkṣā of Sadyojyoti, who preceded him and had composed many independent texts for the systematization of the Śaivasiddhānta philosophical doctrines.

